

# நினைவழியா ஓராண்டு

# An Unforgettable Year

## IN MEMORY OF THE LATE DR. N. SIVARAJAH

12.04.1938 - 06.03.2019

# நினைவழியா ஓராண்டு

# An Unforgettable Year...



**First Year Memorial Publication of**
**Late Dr.Nadarajah Sivarajah**

**23rd February 2020**

நினைவழியா ஓராண்டு
An Unforgettable Year

Memorial Publication of Late Dr.Nadarajah Sivarajah
Published on February 23, 2020

வைத்திய கலாநிதி அமரர் நடராஜா சிவராஜா
அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு

23.02.2020 அன்று இடம்பெற்ற அன்னாரின் முதலாம் ஆண்டு
நினைவு நிகழ்வின் போது வெளியிடப்பெற்றது.

*Compiled by*
Mrs. Malaiaracy Sivarajah
47/3, Adiyapatham Road, Thirunelvely North, Jaffna, Sri Lanka

*Printers*
Kumaran Book House
39, 36th Lane, Colombo 6, Sri Lanka

## தாரமாய் தாயானவர் – நினைவழியா ஓராண்டு

நம்பவே முடியவில்லை. எங்களிடமிருந்து நீங்கள் இறைவனிடம் சென்று ஒரு வருடமாகிவிட்டது.

உங்கள் இறுதி அஞ்சலி நிகழ்வை பேராசிரியர் நந்தியாலும் உங்களாலும் வளர்த்தெடுக்கப்பட்ட சமுதாய மற்றும் குடும்ப மருத்து வத்துறையினரும் மருத்துவபீடத்தினரும் நிறைந்த மனவருத்தத்து டன் Hover Auditorium இல் 10.03.2019 ஒழுங்குபடுத்தி உங்களை இறுதியாக வழியனுப்பிவைத்தார்கள்.

அந்தநிகழ்வில் உங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட, உங்களை நேசித்த பலரும் தமது இறுதி அஞ்சலி உரைகளை ஆற்றி இருந்தனர். அவற்றை தொகுத்து உங்கள் முதலாம் ஆண்டு நினைவாக வெளி யிடுவது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். நீங்கள் சமூகம் சார்ந்து செய்த பல தேவையான, அற்புதமான விடயங்கள் அன்றுதான் பலருக்கும் புதிய செய்திகளாகவிருந்தன. மகத்தான பல பணிகளை எங்கள் சமுகத்திற்காக ஆரவாரமில்லாமல் செய்திருக்கிறீர்கள். செயல்கள் வெற்றியடையும்போது அவற்றின் பின்னாலிருந்தது உங்கள் புன்னகை மட்டுமே. எந்த விடயங்களையும் நான்தான் செய்தேனென நீங்கள் பிரபல்யப் படுத்தியதில்லை.

கற்றவர், மற்றவர், ஏழை பணக்காரர், நலமானவர், நலிவுற்றவர் என எல்லோராலும் விரும்பப்பட்டவர் நீங்கள். எந்த மனிதரின் துயரத்தையும் உங்கள் துயரமாகவே எண்ணி அதைப்போக்க உதவினீர்கள்.

55 வருடங்களாக இலங்கையின் பல பின்தங்கிய பிரதே சங்கள் அடங்கலாக மருத்துவராக தொடங்கிய உங்கள் வாழ்க்கை கிட்டத்தட்ட 40 (1981- 2019) ஆண்டுகளாக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையின் பேராசானாக நிறைவுற்றது. இந்தக் காலப்பகுதியில் மருத்துவ மாணவர்கள், துணை மருத்துவ மாணவர்கள், தாதிய உத்தியோகத்தர், பொது சுகாதாரப் பரிசோ தகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர் -

மாணவர்கள், சுகநலத் தொண்டர்கள் என உங்கள் கற்பித்தல் பரப்பு விரிந்திருந்தது.

அத்துடன் தொழுநோயால் பாதிப்புற்றவர், மாற்று வலுவுள்ளோர், புற்றுநோயாளர், போசணை மட்டம் குறைந்த சிறுவர், தாய்மார், மிதிவெடியால் அங்கவீனமுற்றவர், மதுப்பழக்கத்துக்கு அடிமையாகி வாழ்வைத் தொலைத்தவர், மனசுகநலம் குறைந்தவர், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர், போரினால் பாதிக்கப்பட்டவர் என பலதரப்பட்ட நலிவுற்ற மக்களின் சமகாலப் பிரச்சினைகளை ஒரு மருத்துவராக மட்டுமே நின்று பார்க்காது, பாதிப்புற்ற மக்களின் நிலையில் நின்று, கரிசனையுடன் செயலாற்றினீர்கள்.

நீங்கள் பணியாற்றிய தேசிய சர்வதேச நிறுவனங்களூடாக நிறைந்த மன உணர்வோடும் துணிவோடும் நீங்கள் ஆற்றிய தன்னலமற்ற பணிகளை, அவர்கள் வாழ்வை முன்னேற்றுவதற்காக நீங்கள் எடுத்த முடிவுகளை பல வருடங்களாக அருகிருந்து பார்த்தவள் நான். இம்மலர் உங்கள் சேவைக்கான சான்றுகளை பலரது அஞ்சலி உரைகளூடாக வெளிக்கொணர்கிறது.

எல்லாவற்றிற்கும் ஒரு புன்னகை, ஒரு தலையசைப்பு, அதிர்ந்து பேசாத ஒவ்வொரு சொல்லிலும் அர்த்தம் நிறைந்த அளவான பேச்சு, வெற்றி தோல்வியில் ஆரவாரிக்காத இதயம், கட்டுப்பாடான எளிமையான வாழ்க்கை, தொழிலில் நேர்மையுடனான சமூக அக்கறை, ஒழுங்கு, அயராத உழைப்பு, பிரச்சனைகளைக் கையாளும் பக்குவம் எனப் பலதரப்பட்ட சிறந்த பண்புகளின் சொந்தக்காரர் நீங்கள்.

இறப்பு பலருக்கு சாபமாக வருவது ஆனால் அதுகூட உங்களுக்கு நீங்கள் விரும்பியதுபோல் கடவுளின் கொடையாக வழங்கப் பட்டது. 6.3.2019 இல் மருத்துவமனையில் பிற்பகல் 3.30 மணிவரை என் கைபிடித்து கதைத்திருந்த நீங்கள் 4.00 மணிக்குள் கடவுளால் அழைக்கப்பட்டு விட்டீர்கள். வாழ்வில் மட்டுமல்ல சாவிலும் சரித்திரம் கண்டவர் நீங்கள்.

குடும்பத்தை நேசித்தீர்கள். பிள்ளைகள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தீர்கள். குடும்ப எல்லை யுடன் நின்றுவிடாது சமுக நலன் நோக்கி பல தடைகள் கடந்து, சாதனைகள் படைத்து இந்த உலகில் பிறந்ததற்கான பணிகளை நிறைவு செய்து, இனிவரும் சந்ததிகளிற்கு உங்கள் வாழ்வை சான்றாக்கிச் சென்றவர் நீங்கள்.

நீண்ட பல வருடங்கள் உங்களுடன் இணைந்த வாழ்வும் உங்கள் ஒவ்வொரு பணிகளிலும் பங்களித்த திருப்தியும் கடவுள் எனக்களித்த வரம். உங்கள் நினைவுகளையும் பணிகளையும் நெஞ்சில் சுமந்து, என்றும் என்னுடன் நீங்கள் இருப்பீர்கள் என்ற மாறா நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடர்கிறேன்.

*மலையரசி சிவராஜா*

## You Were Real

*"I held you in my arms*

*I loved you*

*We talked, We fought*

*We laughed, We cried*

*We gave, We sought*

*We lived, you died*

*I hold you in my heart*

*I love you always*

*you are real"*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | தாரமாய் தாயானவர் - நினைவழியா ஓராண்டு | iii |
| 1. | அர்ப்பணிப்பின் மறு உருவம் | 1 |
| 2. | Remembering the Helping Hands | 2 |
| 3. | Silence of the Noble | 4 |
| 4. | சமுதாய மருத்துவத்தின் இலக்கணம் | 6 |
| 5. | மருத்துவபீடத்தின் தூணாய்... | 10 |
| 6. | அமைதி, நேர்மனப்பாங்கின் உறைவிடமாய்... | 13 |
| 7. | யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஓர் நிழலாய்... | 17 |
| 8. | சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் முதுகெலும்புகளில் ஒருவர் | 19 |
| 9. | அகலமும் ஆழமும் கொண்ட சமூக மருத்துவ ஈடேற்றம் கண்டவர் | 22 |
| 10. | The Trails of Dr.Siva | 24 |
| 11. | Selfless Service beyond the Medical Faculty | 27 |
| 12. | எங்களில் ஒருவராய்... | 28 |
| 13. | எல்லைகள் தாண்டிய தலைமைத்துவமும் சேவைகளும் | 31 |
| 14. | மருத்துவபீடமும் சமூகமும் தன் மூச்சாய்... | 33 |
| 15. | சமூக மருத்துவம், சமூக சேவை மக்கள் பயன்பாடு இணைந்த வேலைத்திட்டங்களை செயல்படுத்தியவர் | 35 |
| 16. | குமாரசிங்கம் மாமாவின் மடல்... | 38 |
| 17. | Dr.Siva, The hope for the hopeless | 40 |
| 18. | Siva Passed away, But leaving the Mark | 42 |
| 19. | மாற்றுத் திறனாளிகளின் தந்தையாய், மக்களின் சேவகனாய்... | 45 |
| 20. | In Loving Memory of Dr.Sivarajah | 50 |
| 21. | Memorable moments with Dr.Sivarajah – Dr. Kolitha | 77 |



**Prof. R.Vigneswaran**
*Vice - Chancellor*
*University of Jaffna*

## அர்ப்பணிப்பின் மறு உருவம்

வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா அவர்கள் மிக நீண்டகாலமாக எமது பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் Community & Family Medicine துறையில் தனது பணிகளை ஆற்றி அத்துறையை முன்னிலையில் கொண்டுவந்தவர்.

அவர் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து பின் சிரேஷ்ட விரிவுரையாளர் (Contract and Assignment) என்ற ரீதியில் Community & Family Medicine dept. இல் வேலை செய்து அத்துறையை கடைசி வரை மேம்படுத்தினார். அத்தோடு மட்டுமல்லாமல் இந்த சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய சேவைகளை பல வடிவங்களில் அர்ப்பணிப்புடன் செய்தவர். மாற்றுத்திறனாளிகள், புற்றுநோயாளர்கள் நலிவுற்ற மக்களின் நலனிற்காக முன்னின்று உழைத்தவர். அந்த வகையிலே அவருடைய சேவைகள் யாழ் பல்கலைக்கழகத்தின் சார்பிலும், தமிழ் சமுதாயம் சார்பிலும் பாராட்டப்பட வேண்டியவை.

அவருடைய சேவைகளை முன்னின்று நடாத்துவதற்கு உதவி யாக உழைத்த அவரால் உருவாக்கப்பட்ட விரிவுரையாளர்கள் அவரது பணிகளை தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அவரது உயிர் எங்களை விட்டு பிரிந்து விட்டது. அவரது ஆன்மா சாந்தியடைய பிராத்தித்து விடைபெறுகின்றேன்.

*"No man has lived, until he has done something without ever expecting anything in return"*



**Dr.Subramaniam Raviraj**
*Dean, Faculty of Medicine,*
*University of Jaffna*

## Remembering the Helping Hands

The demise of Dr.Nadarajah Sivarajah at the age of 80 years has certainly created a void in academic and social community of Jaffna. I am proud to say that I am one of his students.

Sir, studied at St.Mary's college, Negombo between 1948- 1954, Ananda College, Colombo between 1955-1958 and finally at Jaffna Hindu College in 1958.

He graduated in Medicine & Surgery from University of Colombo and did his Postgraduate qualification Diploma in Tropical Public Health (DTPH) at the London School of Hygiene and Tropical Medicine, London in 1976 and he did his MD (Community Medicine) and obtained the graduation from Post Graduate Institute of Medicine (PGIM) in 1985.

He was the member of Board of study of Community Medicine in Community Medicine in PGIM, Colombo since 1986 up to his retirement.

Sir has served in various organizations and academic forum in the fifty years of his service including Health Ministry. He served as a District Medical Officer in Ampara, Mawathagama and served as a Medical Officer of Health in Vavuniya, Kegalle, Anuradhapura, Manipay and Kayts. Sir also served as an assistant Port Health Officer in Colombo.

He joined the Medical Faculty, University of Jaffna as a Lecturer in Community Medicine since 1.10.1981 and served up to January 2019 even after his retirement.

He occupied various academic and administrative posts in the Community Medicine Department and as Head, Senior Lecturer

for 17 years. Sir also served in numerous post in various academic and community forum such as – it is a long list some of them are Coordinator for Assistant Medical Practitioners, Chairman Curriculum Committee, Secretary Medical Education, of the Faculty of Medicine, University of Jaffna.

President, Jaffna District Action Committee of the Family Planning Association of Sri Lanka, Vice President, President, Editor and lastly as a Trustee of the Jaffna Medical Association, District Superintendent of St.Jhons Ambulance Service Association of Sri Lanka, Founder member of Jaffna Science Association, Founder member of Shanthikam, AROD, Cane and Consultant to World health Organization.

I came to know Sir, since 1979. Sir was a reputed person and his gratefulness, his dedication service to the entire community he was lovingly known to all of us.

Finally I offer my sympathy and condolences on behalf of Medical Faculty and community of Northern Province to his loving wife Malaiaracy Sivarajah, his children and relations who mourn his demise.

The members of Medical Faculty shall pray for the everlasting rest at the feet of the God and give his family spiritual fortitude to bear up with the instrumental lost

*"Great humanitarian I have interacted with since the late nineties. Rest in peace my friend. I admired you as Albert Shwitzer. School children should read about you and remember you as a model"*

*Dr. Nagalingam Ethirveerasingham*



**Dr.Ratnasabapathy Kesavan**

*Former International Consultant,*
*World Health Organization*

## Silence of the Noble

I have been associated with Sir, Dr.Sivarajah since I was a student and I had a privilege to be his student. He always advices to me when you speak make it short and make it very précised and I will do it today as well.

I was associated with him in World Health Organization (WHO). Actually he was very instrumental to producing his students as internationally reputed consultants in WHO and he has been the WHO Consultant/Coordinator for the Northern Province for more than a decade.

He is very soft spoken but his words are very firm. During his period he was instrumental in organizing the emergency ambulance services which benefited the poor. I would say the free emergency ambulance service is first organized in the Northern Province and very first. Only now it is organized other parts in Srilanka after the help from the Govt. of India. So it has been a pioneer thing, immensely help in the poor in the North especially during the time the health system was very weak.

Sir was also very keen in organizing community mental health services in the north especially after the war, there was lot of post-traumatic stress and people were very much affected. He understands the need and organized something which has been an example for the whole South East Asia Region and people are really coming to study the system from the North.

He made immense sacrifices in order to bring relief to the people of North especially during the Tsunami and right through during the war.

Remembering the time and his advices to make speeches short and very précised I will stop now and we pray the almighty God that let Sir's soul rest in the feet of the God.

**Changing the World**

*"When I was a young man, I wanted to change the world.*
*I found it was difficult to change the world,*
*so I tried to change my nation.*
*When I found I couldn't change the nation,*
*I began to focus on my town.*
*I couldn't change the town and as an older man,*
*I tried to change my family.*
*Now, as an old man, I realize the only thing*
*I can change is myself,*
*and suddenly I realize that*
*if long ago I had changed myself,*
*I could have made an impact on my family.*
*My family and I could have made an impact on our town.*
*Their impact could have changed the nation*
*and*
*I could indeed have changed the world."*



**Dr. A.Keetheswaran**
*Provincial Director of Health Services*
*Jaffna*

## சமுதாய மருத்துவத்தின் இலக்கணம்

டொக்டர் சிவராஜா சேர் அவர்களின் மறைவினால் நாங்கள் ஒரு நல்ல ஆசானை இழந்திருக்கிறோம். நல்ல ஒரு ஆலோசகரை இழந்திருக்கிறோம். மக்கள் மனதினில் இடம்பிடித்த ஒரு மகத்தான மருத்துவரை இழந்திருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு உயர்ந்த உன்னதமான மனிதரை இழந்திருக்கிறோம். சமுதாய மருத்துவத்துறை தன்னுடைய பிதாமகனை இழந்திருக்கிறது. இந்த இழப்பு என்பது வடமாகாண மருத்துவ உலகத்திற்கு மட்டுமல்ல இந்த நாட்டின் மருத்துவ உலகத்திறகே ஒரு பேரிழப்பு ஏனென்றால் டொக்டர் சிவராஜா சேர் அவர்கள் வடமாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் இந்த நாடு முழுவதிலும் மருத்துவ உலகிலே மிக உயர்வாக மதிக்கப்பட்டவர், நேசிக்கப்பட்டவர்.

மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திலிருந்து அனைத்து உயர் அதிகாரிகளினாலும் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டு நேசிக்கப் பட்டவர்.

சமுதாய மருத்துவம் என்பதை நாங்கள் புத்தகங்களில் படித் திருக்கிறோம் ஆனால் அந்த சமுதாய மருத்துவத்தை எப்படி நடைமுறை வாழ்க்கையில் யதார்த்த பூர்வமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை எங்களுக்கு காட்டி வழிகாட்டித் தந்தவர்கள் இரண்டுபேர். ஒருவர் பேராசிரியர் நந்தி அவர்கள் இரண்டாவது எங்களுடைய சிவராஜா சேர் அவர்கள். குறிப்பாக இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை அறிந்து, தேவைகளை அறிந்து அதற்கேற்ப்ப மருத்துவ சேவைகளை வழங்க வேண்டுமென்று எங்களுக்கு எப்போதும் போதித்தவர்கள்.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப்

பேச்சுவார்த்தை முறிவடைந்து மிக மோசமான கொடூரமான யுத்தம் ஆரம்பிக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தரைவழிப்பாதை A9 மூடப்படுகிறது. யாழ்ப்பாணம் முழுவதிலும் பரவலாக பல இடங்களிலும் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரவு நேரங்களில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்தக்கால கட்டத்தில் ஒரு அவசர மருத்துவ தேவைகளுக்காகவோ அல்லது பிரசவத்திற்காகவோ ஒருவருமே வெளியில் வரமுடியாத தொரு சூழல் மிகவும் அழுத்தமான, நெருக்கடியான ஒரு சூழ்நிலை. இந்த சூழ்நிலையிலே பல உயிர்கள் பரிதாபமாக பறிபோய்க் கொண்டிருக்கின்றன.

ஒகஸ்ட் செப்ரெம்பர் மாதம் 2006ஆம் ஆண்டு, அப்போது ஒருவரும் என்ன செய்வதென்று திகைத்து நின்ற நேரம் அந்த நேரத்தில் செப்ரெம்பர் மாதம் டொக்டர் சிவராஜா சேர் அவர்கள் என்னிடம் ஒரு நாள் வந்தார். வந்து என்னிடம் நாங்கள் இதைத் தடுக்க வேண்டும். எப்படியாவது இந்த உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். நாங்கள் ஒரு அவசர அம்புலன்ஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று. அப்போது நான் முதலில் தயங்கி நின்றேன். ஏனென்றால் எங்களுடைய சுகாதாரத் திணைக்கள விதிகளின்படி ஒரு வைத்தியசாலையில் இருந்து இன்னொரு வைத்தியசாலைக் குதான் எங்கள் அம்புலன்ஸ்சுகளைப் பாவிக்கலாம். வீட்டில்போய் நோயாளரை எடுத்துவர நாங்கள் அம்புலன்ஸ் பாவிக்க முடியாது. ஆனால் அவர் சொன்னார் டொக்டர் ஒரு நல்ல விசயத்திற்காக இப்படியான உயிர்களைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் இதைச் செய்வதில் ஒருபிழையும் இருக்காது ஒருவரும் எங்களைத் தடுக்கமாட் டார்கள், தண்டிக்கமாட்டார்கள் நீங்கள் பயப்பட வேண்டாம் என்று.

சரி என்று நாங்கள் இருவரும்போய் அப்போதிருந்த அரசாங்க அதிபர் கணேஸ் ஐயா அவர்களைச் சந்தித்தோம். அவரும் தனது ஒப்புதலை, சம்மதத்தை வழங்கினார். அவருடைய உதவியோடு அப்போதிருந்த யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி அவர்களைச் சந்தித்தோம். அவரும் அந்த நிலமையைப் புரிந்துகொண்டு இரவு நேர அம்புலன்ஸ் சேவையை நாங்கள் ஆரம்பிப்பதற்கு அனுமதியை

வழங்கினார். அன்று ஆரம்பிக்கப்பட்ட அம்புலன்ஸ் சேவை முலம் பல உயிர்களை நாங்கள் காப்பாற்றக் கூடியதாக இருந்தது.

பின்னர் 2009ஆம் ஆண்டிலே அவர் உலக சுகாதார நிறுவனத்தின் உதவியோடு Medical Team International என்ற நிறுவனத்தின் உதவியோடும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த அம்புலன்ஸ் வண்டிகள் எல்லாவற்றிற்கும் மருத்துவ உபகரணங்களையும் வழங்கி, சாரதிகள் மற்றும் உதவியாளருக்குமான பயிற்சிகளை வழங்கி அந்த அம்புலன்ஸ் சேவையை 24 மணிநேர சேவையாக விஸ்தரித்தார். அதன்பின் 2015 ஆம் ஆண்டு அது வடமாகாணம் முழுவதற்குமான ஒரு அம்புலன்ஸ் சேவையாக பரிணமித்தது.

இந்தநாட்டிலேயே இலங்கை முழுவதிலும் ஒரு அம்புலன்ஸ் சேவை இப்படி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது யாழ்ப்பாண மாவட்டத்தில்தான். மாகாணம் என்று பார்த்தால் வடமாகாணத்தில் தான்.

இதன்மூலம் எத்தனையோ உயிர்களை நாங்கள் காப்பாற்றக் கூடியதாக இருந்தது. அந்தச் சேவை, அந்தப் பெருமை எல்லாம் எங்களுடைய டொக்டர் சிவராஜா சேர் அவர்களைத்தான் சாரும். அந்த எண்ணக்கருவை எங்களிடம் முன்மொழிந்து வழிநடத்திய பெருமை அவருக்குரியதாகும்.

உண்மையிலேயே டொக்டர் சிவராஜா சேர் மருத்துவபீடத்தில் இருந்தாலும் எங்களைப் பொறுத்தமட்டில் அவர் எங்களது சுகாதாரத் திணைக்களத்தில் ஒருவராகத்தான் இருந்தார். யுத்தம் நடைபெற்ற காலத்திலும்சரி அதற்குப் பின்னரான காலத்திலும் சரி எங்களுக்கு ஒரு தந்தையை போலிருந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி எங்களை வழிநடத்தியவர். எங்களுடைய முக்கிய கூட்டங்களுக்கு நாங்கள் அவரை அழைப்போம். கிட்டத்தட்ட சுகாதாரத் திணைக்களத்தில் ஒருவராகத்தான் அப்போது அவர் இருந்தார். இன்றைக்கு சுகாதாரத் திணைக்களம் அல்லது சுகாதார சேவைகளை இந்தளவுக்கு கட்டியெழுப்பியதில் அவரது பங்களிப்பு அளப்பரியது. அதை இந்த சந்தர்ப்பத்திலே நான் நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வடமாகாணத்தில் யத்தம் முடிவடைந்து வடமாகாண சுகாதார சேவைகளை கட்டி எழுப்புவதற்காக நாங்கள் ஒரு Strategic Management Plan என்ற ஒரு திட்டத்தை வரைய ஆரம்பித்தபோது அதற்கு முக்கிய ஆலோசகராக இருந்து அந்த திட்டத்தை எங்களுக்கு வடிவமைத்துத் தந்தவர் டொக்டர் சிவராஜா சேர் அவர்கள்.

அடுத்தது அவர் சார்ந்த சமுதாய மருத்துவத்துறையை பொறுத்தமட்டில் அடிமட்ட மக்களுக்காக கிராமங்களுக்குச் சென்று, வீடு வீடாக சென்று அவர்களது தேவைகளை அறிந்து அவர்களிற்கான சேவைகளை வழங்குவதில் முன்னின்றவர்.

நான் நினைக்கிறேன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 70ஆம் 80ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தொழுநோய் பரவிக்கொண்டிருந்த காலம் அதைக் கட்டுப்படுத்துவதிலே பலரும் தயங்கிநின்ற வேளையிலே ஒரு சுகாதார வைத்திய அதிகாரியாக கிராமம் கிராமமாக நோயாளிகளின் வீடு வீடாக சென்று அவர்களுக்கு மருந்துகளை வழங்கி தொழுநோயை அந்தக்காலத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தவர் டொக்டர் சிவராஜா சேர் அவர்கள்.

அடுத்து அவர் தனியே மருத்துவ உலகிற்கு மட்டுமல்லாது மிகவும் மனிதநேயம் மிக்க மனிதராகவும் விளங்கினார். பாதிக்கப்பட்ட மக்க ளுக்காக அல்லது சமுகத்தில் நலிவுற்ற மக்களுக்காக எப்போதும் குரல்கொடுத்து வந்தவர். மாற்றுவலுவுடையோருக்காக அதாவது விசேட தேவைக்குட்பட்டவர்களுக்காக AROD என்ற நிறுவனத்தை உருவாக்கி அவர்களது வாழ்வில் ஒளியேற்றியவர்.

இப்படியாக அவரது பெருமைகளை சேவைகளை சொல்லிக் கொண்டே போகலாம் இருந்தாலும் இந்த சந்தர்ப்பத்திலே அவரது பிரிவுத்துயரில் வாடிநிற்கும் அவரது குடும்பத்தவர், உற்றார், உறவினார், நண்பர்கள், யாழ் மருத்துவபீடம், சமுதாய மருத்தவத் துறையினர் அனைவருக்கும் வடமாகாண சுகாதாரக் குடும்பத் தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கிறேன். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இந்தநேரத்தில் இறைவனை இறைஞ்சி நிற்கிறேன்.



**Professor Vasanthy Arasaratnam**
*Senior professor in Biochemistry,*
*Former Vice-chancellor & Dean Faculty of Medicine,*
*University of Jaffna*

## மருத்துவபீடத்தின் தூணாய்…

டொக்டர் சிவராஜா அவர்களை எனக்கு இந்த மருத்துவபீடத்திலே 1984ம் ஆண்டு இணைந்ததிலிருந்து தெரியும். நாங்கள் எப்பொழுதும் Biochemistry Department இன் Corridor இல் Entrance க்கு முன்னால் சந்திப்போம்.

டொக்டர் சிவராஜா நான் நினைக்கிறேன் 2000 அல்லது 2001ஆம் ஆண்டில் மருத்தவபீடத்தில் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். உடனடியாக அவருக்கு உலக சுகாதார நிறுவனத்தில் Consultant Post கிடைத்தது. அப்படி இருந்த வேளையில் பேராசிரியர் நந்தியும் ஓய்வுபெற்றுவிட்டார். எங்களுக்கு சமுதாய மருத்தவத் துறையிலே ஒருவரும் இல்லை. அப்போ நாங்கள் டொக்டர் சிவராஜா அவர்களிடம் கேட்டோம் என்ன செய்யலாமென்று அவர் சொன்னார் நீங்கள் எனக்கு சம்பளம் தரவேண்டாம் நான் வந்து உங்களுக்கு வேலை செய்கின்றேன் என்று.

டொக்டர் சிவராஜாவின் பெயரை வைத்துக்கொண்டு நாங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தை நடத் தினனாங்கள். இது கனபேருக்கு தெரியாமல் இருக்கலாம். நான் பீடாதிபதியாக இருந்த காலத்திலே 2000 - 2003 வரை பேராசிரியர் நந்தியும் தனது சில தனிப்பட்ட காரணங்களால் மருத்துவபீடத்தில் இல்லை. அந்தவேளையில் டொக்டர் சிவராஜாவினுடைய உண் மையான கருணை மனத்தினால்தான் எங்களால் மருத்துவபீடத்தை கொண்டு நடத்தக்கூடியதாக இருந்தது.

நான் பீடாதிபதியாக இருந்த காலத்தில் எங்களுடைய பீடத்தில் 68 Cadres இல் ஆக 14 Cadres தான் Permanent staff ஆல் நிரப்பப்பட்டு இருந்தது. டொக்டர் சிவராஜாவும் அப்படிப்பட்ட நேரத்தில் ஓய்வுபெறுகிறார் அவருக்கு WHO Consultancy கிடைக்கிறது. டொக்டர்

சிவராஜாவிடம் கேட்டோம் அவர் சொன்னார் நீங்கள் எனக்கு சம்பளம் தரவேண்டாம் நான் வந்து வேலை செய்கின்றேன் எனறு. நாங்கள் இல்லையென்று சொல்லி Council இல் கதைத்து அவருக்கு Visiting Lecturer Position கொடுத்தோம்.

இங்கு படித்த மருத்துவ மாணவர்களுக்குத் தெரியும் Community Medicine இனுடைய Workload. அவர் தன்னுடைய நேரத்தை ஒதுக்கி WHO Consultancy தவிர்ந்த ஏனைய நேரங்களில் வந்து மருத்துவபீடத்துக்கு தன்னுடைய உதவிகளை முழு மனதுடன் செய்தவர். அதுதவிர எங்களுடைய சமுதாயத்தைப் பொறுத்தவரையில் அவருக்கிருந்த அக்கறை, அவருக்குத் தெரியும் மக்களுக்கு என்னென்ன தேவையென்று அதன் அடிப்படையில் அவர் WHO இன் உதவியுடன் மருத்துவபீடத்திலே, ஆரம்பித்த Diploma in Community Health, Diploma in Medical Laboratory Science, Certificate Courses in Pharmacy, Certificate Courses in Physiotherapy இன்று எல்லா இடங்களிலும் Degree Programs இருக்கிறது. அந்தக் காலத்திலே யாழ்ப்பாண வைத்திய சாலையில் ஒரே ஒரு Physiotherapist தான் இருந்தவர். Pharmacist இல்லை. எங்களுடைய பகுதிகளில் இவற்றிற்குரிய வெற்றிடங்கள் மிக அதிகமாக இருந்த காலத்திலே அதனுடைய தேவைகளை உணர்ந்து கடைசி நாங்கள் ஒரு Diploma Holders ஆவது உருவாக்குவோம் குறிப்பாக Physiotherapists. சத்திர சிகிச்சைகளின் பின்னர் கனபேர் படுக்கையில் Confined ஆக இருக்கினம் அவர்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கும் நாங்கள் கட்டாயம் இதை செய்ய வேண்டும் என்று டொக்டர் சிவராஜா ஆரம்பித்தது இந்த கற்கைநெறிகள். WHO இடமிருந்து Funds எடுத்துத்தான் இந்த கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டது.

அதே வேளையில் நான் நினைக்கிறேன் Dr.Sivarajah இருக்கும் வரைக்கும் அவர்தான் Head of the Dept. ஆக இருந்தார். அதன் பின்னர் அவர் Retire பண்ணிய பிறகு அந்த Dept. ஒருத்தரும் இல்லை நான் தான் Acting Head ஆகவும் பின்னர் Head ஆகவும் இருந்த காலமிருக்கிறது. அந்த வேளையிலே அந்த Dept. நடாத்துவதற்கு எனக்கு உதவி செய்தவர்களுள் திருமதி சிவராஜா மிக முக்கியமானவர் அவருடைய கடமையும் அவருடைய ஊக்கமும் Dr. சிவராஜா எங்களுடைய Faculty க்கு தன்னுடைய சேவையை மேலும் மேலும்

செய்வதற்கு உதவியாக இருந்தது. Dr.சிவராஜா இந்த வருடம் அவருக்கு இயலாமல் போகும் வரைக்கும் வந்து போன ஒருவர். அவரிடமிருந்து நாங்கள் பழகவேண்டியவை பல இருக்கிறது கனக்க கதைப்பதில்லை செயலில் செய்வார். அவரைப்போல Systematic காக இருப்பதற்கு ஒருவரும் இங்கு இல்லை. என்னமாதிரி அவர் தன்னுடைய வேலைகளை Organize பண்ணி செய்தார் என்பது மிக மிக கேள்விக்குற்குரிய விடயம் ஏனென்றால் தனி ஒருவராக இருந்து 60-80 பிள்ளைகளுடைய Research Project ஐ அவர் supervise பண்ணிய விதம் அதை Systematic ஆக செய்த விதம் நான் நினைக்கிறேன் நாங்கள் யாராவது செய்வம் என்று. எந்த ஒரு விடயத்தை நாங்கள் கேட்டாலும் நான் செய்து தருவன் என்ர Diary ஐ பார்த்து சொல்கிறேன் என சொல்லுவார்.

அப்படியாக அவர் ஒவ்வொரு விடயத்தையும் Organize பண்ணி Time Manage பண்ணி எங்கனுடைய Facultyக்கும், எங்களுடைய சமுதாயத்திற்கும் செய்த உதவியை ஒரு காலமும் எங்களால் மறக்க முடியாது.

நான் நினைக்கிறேன் இன்றைக்கு அவருக்கு இந்த அஞ்சலி நிகழ்வை இதை விட பெரியளவில் செய்திருக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். எப்படியாக இருந்தாலும் அவருடைய சேவைகளை மதித்து அவருடைய உயிர் இறைவனது தண்ணிழலில் இருக்க வேண்டும் என்று நான் இறைவனை பிரார்த்தித்து அவருடைய மனைவிக்கு, பிள்ளகைளுக்கு, குடும்பத்தினர் எல்லோருக்கும் என்னுடைய ஆழ்ந்த ஆறுதல்கள் தெரிவித்து விடைபெறுகிறேன்.

''*யாழ்ப்பாண மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவத்துறை ஆசானாகத் திகழ்ந்து, மருத்துவத்துறையுடன் இணைமருத்துவத் துறையின் வளர்ச் சிக்கும் விருத்திக்கும் ஆரம்பகாலம் முதல் ஊக்கமளித்து, தனது இறுதிக்காலம் வரை இணை மருத்துவத்துறை மாணவர்களின் கல்விப் பணியில் அளப்பரிய சேவையாற்றிய வைத்திய கலாநிதி நடராசா சிவராஜா அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.*''

*இணைமருத்துவ விஞ்ஞான அலகு*
*மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்*



**Professor. Kanagasabai Sivapalan**

*Former Dean, Faculty of Medicine*
*Dept. of Physiology, Faculty of Medicine, Jaffna*

## அமைதி, நேர்மனப்பாங்கின் உறைவிடமாய்...

Dr.சிவராஜா அவர்களை எப்பொழுது நான் சந்தித்தேன் என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை. என்னுடைய மருத்துவப்பீட காலத்திலே Community Medicine Department - Physiology Department ஒரே Floor இல் இருந்தது. என்ன பிரச்சனை இருந்தாலும் ஏதாவதொரு தேவையிருந்தால் Com.Med Dept. போவதில் எந்த பிரச்சனை தடங்கலும் இருக்கவில்லை. அந்த Com.Med Dept. வந்து ஒரு குடும்பமாக அந்த Dept. ஒரு குடும்பம், ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு குடும்பம் இருந்தது. ஆனால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு குடும்பமாக, பின்பு மருத்துவப்பீடத்தை ஒரு குடும்பமாக மிகவும் அன்னியோன்னியமாக ஒரு இணைப்புப்பாலமாக அந்த Dept. அந்த காலத்திலே இருந்தது.

எப்பவும் போகலாம், எதுவும் கதைக்கலாம், எதுவும் செய்யலாம் என்ற சந்தோசமான காலகட்டம். Tea time போனால் Tea குடிக்காமல் வெளியில் வரமுடியாது. இது போராசிரியர் சிவஞானசுந்தரமவர்களுடைய உருவாக்கமா அல்லது Dr. சிவ ராஜாவின் உருவாக்கமா அல்லது அவர்கள் இருவருக்கும் மிகவும் உறுதுணையாக Dept. இல் இருந்த மலையரசியின் உருவாக்கலா, எல்லோரும் சேர்ந்த உருவாக்கலா எனக்கு தெரியாது. ஆனால் அந்த Culture, பாரம்பரியம் அங்கே நிலவியது யாரை முதலில் சந்தித்தேன் யாரை பிறகு பிறகு சந்தித்தேன் என்று என்னால் சொல்லமுடியாது. அந்த காலகட்டத்திலே பல பிரச்சினைகள் ஆனால் எந்தப்பிரச்சினை வந்தாலும் எந்தச்சிக்கல் ஏற்பட்டாலும் அல்லது எந்தப் பிரச்சினை எங்கு பிழை நடந்தாலும் Dr.சிவராஜாவிற்கு கோபம் வந்து நான் கண்டிருக்கிறேனா? அல்லது கவலைப்பட்டு நான் கண்டிருக்கிறேனா? என்று கேட்டால் இந்த இரண்டிற்கும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் எந்த பிரச்சினையாக இருந்தாலும்

சரிஎன்னசெய்வம், இனி அடுத்தது என்ன செய்யலாம் என்ற ஒரு Positive Attitude தான் அவர் எங்களுக்கு காட்டினார்.

Dr.சிவராஜா கவலைப்பட்டு நான் கண்டதில்லை அதற்கு இன்னுமொரு முக்கியமான உதாரணம் நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அவரின் Positive attitude வாழ்க்கையை – தன்னுடைய வாழ்க்கையையும் எவ்வளவு தூரம் நேர்முறையாக (Positive) ஆக பார்த்தார், மற்றவைகளையும் எவ்வளவுக்கு Positive ஆக பார்த்தார் என்பதற்கு பல உதாரணங்கள் நாங்கள் பார்த்து விட்டோம். அவர் தன்னுடைய வாழ்கையை எப்படி Positive ஆக பார்த்தார் என்பதில் எனக்கொரு அனுபவம். சில வருடங்களுக்கு முன்னர் Dept. இற்கு வந்தார். தன்னுடைய பார்வை Visual Filed தனக்கு எவ்வளவு இடம் தெரியும் என்றதை சோதிக்க வேண்டும் எங்களிடம் Peri meter இருந்தது ஒருக்கால் செய்யவேண்டும் எனச் சொன்னார். என்ன விசயம் என்று கேட்க இல்லை காரில் வரும்போது ஒரு ஆள் குறுக்கால வந்திட்டார் நான் அதைக் கவனிக்கவில்லை ஏனென்று நான் பார்க்கவேண்டும் சரி என்று அவரின் Field of Visionஐ நாங்கள் பார்த்தபோது அவரது விழித்திரையில் பொரும்பாலும் பக்கங்களில் எல்லாம் பார்க்க முடியாத நிலையிலே நடுவில் மட்டும் தான் பார்க்ககூடிய ஒருநிலை இருந்ததை நாங்கள் கண்டோம். அவரிற்கு அதைக் கண்டவுடன் சந்தோசமா, துக்கமா தெரியாது Thank you very much என்று சொல்லிப்போட்டு இனி நான் காரை கவனமாக ஓட வேண்டும் என்று சொல்லிப்போட்டு போனார். ஆனால் அவர் ஏதும் Accident பட்டதாக இல்லை. இவ்வளவு பார்வை பிரச்சனையோடையும், அந்தப்பிரச்சனையை உணர்ந்தவுடனேயே அதற்குரிய பரிசோத னையை மேற்கொண்டு அதற்குரிய அவதானத்துடன் அதற்குப் பின்னரும் காரைச் செலுத்தி Accident படாமல் இருந்த ஒருதன்மையை நாங்கள் விதந்துரைக்க வேண்டியதாக இருக்கின்றது.

மேலும் Com.Med மிகவும் work load கூடினதென்று வசந்தி சொன்னதை நீங்கள் கேட்டீர்கள். அதனுடைய மிகவும் பெரிய பாரங்கள் நான் Dean ஆக இருக்கும்போது பிற்காலத்தில் இந்த ஆளணிப்பற்றாக்குறையோட இருக்கும்போது, Dr.சிவராஜாக்கு என்ன சொல்லிப்போட்டு அவர் சந்தோஸமாக இருப்பார். மலையரசி

தான் எங்களோட வந்து சண்டை பிடிக்கிறது. அவ வந்து Prof. சிவ ஞானசுந்தரமாக இருந்தாலும் சரி, Dr.சிவராஜாவாக இருந்தாலும் சரி இந்த தமிழில் சொல்லுவார்கள் எள் என்று சொன்னால் எண்ணெய்யாக வந்து நிக்கிற ஒரு ஆள். இந்தக் கூட்டு எங்களுடைய மருத்து வப்பீடத்துக்கு மிகவும் மிகவும் இன்றியமையாயதாக இருந்தது அவர் செயல் வீரராக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு. அதாவது Com.Med. இனால் யாழ்ப்பாணம் முழுக்க Clinics நடக்கும் Students எல்லோரும் போவார்கள் அவர்களை போய் பார்க்க வாகன ஒழுங்குகள் வேணும். வாகன ஒழுங்குகள் செய்து தரவேண்டுமென சொன்னால் எங்கட பல்கலைக்கழகத்தில் அந்த நேரத்தில் இருந்த வசதி களும், நிர்வாக சிக்கல்களும் எவ்வளவோ பிரச்சினைகள். ஆனால் நாங்கள் வாகன வசதி செய்து கொடுக்கவில்லை என்பதற்காக எந்தவொரு செயற்பாடும் நிறுத்தப்படவில்லை. இதை நான் சொல்லவேண்டும் ஏனென்று சொன்னால் Research மாணவர்கள் செய்வார்கள் அதற்கு அப்பாற்பட்டுபோய் Family Attachment, Field Health Activity என மாணவர்கள் தாங்களாகவே Health Activities ஒழுங்கமைத்து நடாத்துவார்கள். அதற்கு இவர்கள் போய் அதை Evaluate பண்ண வேண்டும். பல முக்கியமான மிகவும் நேரமெடுத்து செய்கின்ற உன்னதமான கற்பித்தல் முறைகளை எங்களுடைய மருத்துவபீட பாடவிதானத்திற்குள்ளே கொண்டுவந்தமை எனக்கு தெரியாது Prof.சிவஞானசுந்தரமா அல்லது அவரது வலதுகரமாக இருந்த சிவராஜாவா என்று. ஆனால் இவர்கள் இருவரும் தாங்கள் இருந்த காலத்திலேயும் சரி இல்லாத காலத்திலேயும் சரி ஏதோ ஒரு முறையில் இந்த செயற்பாடுகள் அனைத்தும் நடாத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தினார்கள்.

வசந்தி சொன்னா சம்பளம் தராட்டி பரவாயில்லை என்று ஆனால் எனக்கு ஞாபகம் இருக்கிறது இவர்களுக்கு Appointment போடவேண்டும் என்று நாங்கள் Letters கொண்டுபோகும் போது Senate, Council இல் இருக்கும் சில பேரின் Comments என்ன அவருக்கு WHO கொடுக்கிற காசு காணாதோ நாங்களும் குடுக்கவேணுமோ என்று கேட்ட ஆட்களும் இருக்கிறார்கள்.

இப்படியான ஒருசேவை மனப்பான்மையோடு மிகவும் அவசியமான ஒரு நிலமையை நிரப்பி எங்களது மாணவர்கள் உன்னதமான நிலையிலே சமுதாய சேவையை செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இரவு பகல் பராது ஏற்கனவே சொன்னதுபோல இரவு 8 மணி, 9 மணிக்கும் Com.Med dept. இல் வேலை நடக்கும் அவர்கள் Overtime கேட்கவில்லை ஆனால் அவ்வளவு வேலைகளையும் செய்து முடித்தார்கள் எப்படி? இது மலைப்புக்குரிய விடயம். அந்த அர்ப்பணிப்புடன் சமுதாயம் நல்லா இருக்கவேண்டும் என்று மருத்துவபீடத்திலேயும் அதை செய்து ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல தன்னுடைய WHO மூலமும் அல்லது வேறு வேறு சேவைகள் மூலமும் நாட்டுமக்களுக்கு நேரடியாகவும் பங்களித்து இந்த வையத்திலே வாழ்வாங்கு வாழ்ந்தார் Dr.சிவராஜா என்றால் அது மிகையாகாது.

அந்த வகையிலே பிரிவு என்பது துயரம் குடும்ப உறவினர்களுக்கு துயரத்தை மறப்பது கொஞ்சம் கடினமாக இருக்கும். ஆனால் அவருடைய செயற்பாடுகளை அவரால் அடைந்த நன்மைகளை மனதில் கொண்டு அவருடைய இழப்பை தேற்றிக்கொள்ள வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து வள்ளுவன் சொன்னது போல வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்தார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்பதை நினைவு கூர்ந்து அவர் தெய்வமாகி விட்டார் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்

நன்றி

*"Never blame anyone in your life*
*Good people give you Happiness*
*Bad people give you experience*
*Worst people give you a lesson*
*Best people give you memories"*



**Dr.S.Sribavanantharaja**
*Deputy Director*
*Teaching Hospital, Jaffna*

## யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஓர் நிழலாய்...

வைத்தியர் சிவராஜா அவர்கள் ஒரு மருத்துவராக, ஒரு விரிவுரையாள ராக , ஒரு தலைவராக, ஒரு தந்தையாக மக்களுக்கு ஆற்றிய சேவைகளை நாங்கள் இன்று அளவிடுவதற்கு அளவுகோலே இல்லை என்று சொல்லலாம். அந்தளவுக்கு அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை.

குறிப்பாக போராட்டங்கள் மிகுந்த காலப்பகுதியில் எல்லா வைத்தியர்களும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த பொழுது எமது மக்களுக்காக இங்கேயே இருந்து இங்கேயே சேவை செய்ய வேண்டும் என்றிருந்த ஒரு மகத்தான மாமனிதர் அவர்.

அந்த வகையில் குறிப்பாக யாழ் போதனா வைத்தியசா லைக்கு அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. உதாரணமாக போராட்டம் மிகுந்த காலத்தில் நோயாளர்கள் மேலதிக சிகிச்சை களுக்கு கொழும்புக்கு அழைத்து செல்லப்படுவதற்கோ அல்லது மருத்துவ வசதிகளின்றி நாங்கள் கஸ்ரத்தை அனுபவித்த வேளையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் சர்வதேச செச்சிலுவை சங்கத்தின் (ICRC) உதவிகளினூடாக தேவையாக மருந்துகளை எமது வைத்தியசாலைக்கு பெற்றுத்தந்து சேவையாற்றியது மட்டுமல்ல எமது புற்றுநோயாளர்கள் மற்றும் விசேட வைத்திய சேவைகளை வேண்டி நின்ற நோயாளர்கள் கொழும்புக்கு செல்வதற்காகவும் கப்பல் சேவைகளையும் ஏற்படுத்தித்தந்த சேவையின் பெருமை வைத்தியர் சிவராஜா அவர்களையே சாரும்.

யாழ் போதனா வைத்தியசாலையை பொறுத்தவரை அவரிடம் கல்வி கற்ற வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் சுமார் 90% மானவர்கள் இன்று அங்கு கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்

எனவே அந்த வகையில் எமது வைத்தியசாலையின் சார்பில் அவருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்த கொள்கிறோம்.

அத்துடன் எமது வைத்தியசாலையில் அபிவிருத்திசபை உறுப்பினராக இருந்து எங்களுக்கத் தேவையான எந்த ஒரு உதவி களையும் ஆலோசனைகளையும் வழங்குவதில் எப்பொழும் மிகவும் பெரும் பங்காற்றி இருந்தார். எமது வைத்தியசாலை பற்றிய ஒரு ஆவணத்தை தயாரித்து அந்த ஆவணத்தை எமது அடுத்துவரும் சந்ததிக்கு வழங்கிய பெருமையும் அவரையே சாரும்.

அந்த வகையில் எமது வைத்தியர் சிவராஜா அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் மருத்தவ பீடத்தினர் மற்றும் அனைவருக்கும் எமது போதனா வைத்தியசாலையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்த கொள்வதோடு அன்னாரின் ஆன்மா இறைவனடியில் சாந்தியடைய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி!

*''நீர்கொழும்பில் வேர் கொண்டு ஆனைக்கோட்டையில்*
*அழகிய விருட்சமாகி சமுதாய மருத்துவத் தேர்*
*சரியாக விரைந்தோட சாதுரியச் சாரதியாய்*
*குருத்துகளை மருத்துவராய் உருவாக்கம் ஆசானாய்*
*சிறப்பாகப் பணிசெய்த சிவராஜ தீபமே!*
*சிவனடியில் அமைதிபெற அனுதினமும் பிரார்த்திப்போம்.''*

*யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய*
*நிபுணர்களின் அமையம்*



**Dr.P.A.D.Coonghe,**
*Head, Department of Community & Family Medicine,*
*Faculty of Medicine, University of Jaffna*

## சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் முதுகெலும்புகளில் ஒருவர்

பேராசான் வைத்திய கலாநிதி சிவராஜா அவர்களின் இந்த அஞ்சலி நிகழ்விலே அவரது துறைசார்பில் நான் சில வார்த்தைகளை கூற வேண்டியுள்ளது.

வைத்தியர் சிவராஜா அவர்கள் வைத்தியர் என்பதற்கு எங்களது தமிழ் சமுதாயத்தில் இருக்கின்ற வரைவிலக்கணங்களுக்கு அப்பாற்பட்ட விதமாக ஒரு வைத்தியராக இயங்கியவர்.

நான் கடந்த 8 வருடங்களாக Sir உடன் Department இல் வேலை செய்கின்றேன். அதற்கு முன்னர் அவரது மாணவனாக இருந்த காலங்களிலும் நிறைய அனுபவங்களை பெற்றிருக்கிறேன்.

முக்கியமாக அவருடைய செயல் அனுபவங்கள் Cholera Epidemics மற்றும் Leprosy Control தொழுநோய்க் கட்டுப்பாட்டிலும் மிகவும் மிகவும் ஆச்சரியம் தரத்தக்க வகையில் அவரது செயல்பாடுகள் இருந்தன.

3 மாதங்களிற்கு முதல் கூட வந்து என்னிடம் ஒரு புத்தகம் தந்தவர் Cooghe இது நான் மன்னாரில் ஒரு Cholera Epidemics வந்த போது எழுதின Report. அதில் மிகவும் துல்லியமாக ஒவ்வொரு Patient பற்றியும் எப்படி இனம் கண்டு கொண்டது, எப்படி அவர்களை Approach பண்ணி கட்டுப்படுத்தியது என்பது விபரிக்கப்பட்டுடிருந்தது. ஒரு மிகப்பழைய ஒரு ஆவணம் 75-76 இல் செய்ததாக நான் நினைக்கிறேன். பாதுகாப்பாக வைத்திருந்து இனி எனக்கு வைத்திருக்க இயலாது நீர் கவனமாகவைத்தக் கொள்ளும் என்று தந்தவர். அப்படி தனது அனுபவங்களை பலவிதமாக எங்களோடு பகிர்ந்து கொண்டவர்.

எங்களுடைய துறையின், சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் முதுகெலும்புகளில் ஒருவர் பேராசிரியர் நந்தி மற்றவர்

பேராசிரியர் சிவராஜா Sir. இவர்கள் இருவரையும் எங்களது துறை என்னாளும் மறக்க முடியாது. இது அவர்கள் மேல் கட்டப்பட்ட துறை.

இந்த சமுதாய மருத்துவத்துறை மருத்துவபீடத்திலேயே பலர் வியக்கின்ற துறை, எப்படி இவர்கள் இயக்குகிறார்கள்? மருத்து வர்களுக்கு உண்மையான களப்பயிற்சிகளைக் கொடுப்பதிலே சிவராஜா Sir அவர்கள் தனித்துவமானவர்.

எப்படி இந்த மாணவர்களுக்கு நாங்கள் சமுதாய மருத்துவத்தை போதிக்க வேணும் என்பதிலே தனித்துவமாக செயல்பட்டு பலவிதமான போதனைகள் Lectures மட்டுமென்றில்லை அவர் Field இல் Family Attachment, Case Study, Research Activity, Field Health Activity, Clerkship Programs என பலவிதமானவற்றறை பேராசிரியர் நந்தியோடினைந்து வடிவமைத்து மாணவர்களுக்கு ஒரு Practical - ஒரு செயல்முறை வடிவமான கல்வியைத்தான் போதித்தவர். அதிலே அவருடைய செயல்பாடுகளில் முக்கியமானது மாணவர்களுக்கு இந்த பயிற்சிகளை பெறுவதற்க்கு ஊக்கமளித்து வளர்த்தது.

இன்னோரு விடயம் சுகாதாரக் கல்வியை மக்கள் மத்தியிலே கொண்டு சேர்பதிலே அவர் திறம்பட செயலாற்றினார். அதில் முக்கியமாக சுகமஞ்சரி எனும் இதழை வெளியிடுவதில் முக்கிய பங்காற்றினார். ஆரம்ப காலகட்டங்களில் அது எல்லோருக்கும் முக்கியமாக மாணவர்கள் மத்தியிலும், சுகாதாரப்பணியாளர்கள் மத்தியிலும் சிறப்பாக வாசிக்கப்பட்ட ஒரு கைநூல் சுகமஞ்சரி. அதன் இதழாசிரியராக இருந்து அதைத்திறம்பட வெளியிட்டு மக்கள் மத்தியில் சுகாதாரக்கல்வியை கொண்டு சேர்ப்பதில் திறமையாக செயலாற்றினார்.

அத்தோடு மாணவர்களுக்கு Research Activity Supervise பண்ணுவதில் சிறப்பான பங்கை ஆற்றினார். எங்களுக்கு இப்போ வந்து ஒரு 10-15 Research Supervise பண்ணுவது என்றாலே கஸ்ரமாக இருக்கிறது. பேராசிரியர் வசந்தி சொன்ன மாதிரி 80-90 Researchஐ தனிமனிதனாக இருந்து Supervise பண்ணினார்.

எல்லாவற்றையும் உன்னிப்பாக, நுணுக்கமாக எமுதி வைத் திருப்பார். இந்த மாணவன் வந்தவர், இந்த மாணவன் வரவில்லை, எத்தனை தடவைகள் சந்தித்தவர், போனமுறை என்ன வேலை

கொடுத்தது, செய்தவரா இல்லையா எல்லாவற்றையும் Record இல் வைத்திருந்து அவர்களை மேற்பார்வை செய்தவர். அப்படியான ஒரு பெரிய மனிதரை நாங்கள் இழந்துவிட்டோம். எங்கள் துறைக்கு - சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறைக்கு இது ஈடு செய்யமுடியாத இழப்பு கடைசி வரைக்கும் எங்களோடு இருந்தவர். Clerkship க்கு மாணவர்களை பயிற்சிக்கு அனுப்பும்போது அதிலும் கூட கடைசிவரைக்கும், AROD நிறுவனத்துக்கு நாம் அனுப்பும் போது அவர்தான் Class எடுக்கிறவர். இப்படியான பல சேவைகளை எங்களுடன் இணைந்து செய்தவர்.

இறுதியாக அவருடைய Ambition எமது சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை be a Centre of Excellence in Primary Care இது தான் அவரின் குறிக்கோள்.

ஆகவே Sir, We all as a department we promise you we will take our department to achieve the target that the Department of Community & Family Medicine to be Centre of Excellence in Primary Care.

*''நான் சொல்வதை எங்கள் குக்கிராமங்கள் எங்கும் எடுத்துச்*
*செல்லுங்கள்! அதற்கு நீங்களே மெத்தப் பொருத்தமானவர்கள்*
*என்பதால் சமுதாய மருத்துவப் பாடமதை ஆழமாய்ச் சொல்கிறேன்.*
*பூநகரியையும் கடந்து பூக்குளம் வரையும் கொண்டு செல்லுங்கள்*
*எனத் தாங்கள் திருவாய் மலர்ந்தவை எம் காதில் ரீங்காரம்*
*செய்ய அம்பாறை மாவட்டத்தின் தங்கவேலாயுதபுரம் மற்றும்*
*கஞ்சிகுடிச்சாறு வரை சுமந்தோம்.*
*சொர்க்கத்தில் ஓய்வு கொள்ளுங்கள் ஆசானே!''*

**Dr.T.Tharsanan**



**Prof.C.Sivagnanasundram**
*Professor in Community Medicine*

# அகலமும் ஆழமும் கொண்ட சமூக மருத்துவ ஈடேற்றம் கண்டவர்

சமுதாய மருத்துவத்தின் வைத்திய கலாநிதி ந. சிவராஜா அறுபது வயதுக்கு புதிய அர்த்தம் தருகிறார். அவரது சிந்தனையிலும் சேவையிலும் இளமை காணப்படுகிறது. மக்களை நேசிப்பவர்கள், சமுதாய உறவில் கலந்தவர்கள், தன்னலங் கருதாதவர்கள் முதுமை காண்பதில்லை என்ற உண்மைக்கும் அவர் உதாரணம். அப்படி யானவர்கள் வாழ்வு வளமும், விரிவும், வியப்பும் மிக்கதாகும்.

நடராஜா சிவராஜா நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியில் சிங்களத்தில் ஆனா படிக்கத் தொடங்கி பௌத்த கலாசார ஆனந்தா கல்லூரியில் பல்கலைக்கழகம் வரை படித்தவர். இப்போது தமிழ் மொழியில் மருத்துவ எழுத்தாளர், பேச்சாளர் வரிசையில் முன்னணியில் இருப்பவர். 'சுக மஞ்சரி' சஞ்சிகையின் ஆசிரியர். அதே வேளையில் மருத்துவ விஞ்ஞான இதழான Jaffna Medical Journal இன் மதிப்புள்ள ஆசிரியர் கூட.

கலாநிதி சிவராஜாவின் சமூக மருத்துவ ஈடேற்றம் அகலமும் ஆழமும் கொண்டது. வெவ்வேறு திசைகளில் எல்லைகள் கண்டது. நமது சிறுவர் போஷாக்கின் நலிந்த நிலையை புள்ளி விபரங்களுடன் உலகறியக் காட்டியவர், முதன் முதலாக வயோதிபரின் உடல், உள சமூக சுகநிலை பற்றிய ஆய்வை தனது கலாநிதிப் படிப்பிற்கு எடுத்துக் கொண்டவர்.

இனி, கிராமச் சூழல் சுகாதாரம் தொடக்கம் யாழ். நகரிலே வாழ்வில் தாழ்வுற்ற பெண்கள், பிள்ளைகள் விவகாரம் வரை, குடல் புழு நோய் தொடக்கம் தொழு நோய் வரை, மிதிவெடி, முதல் உதவி தொடக்கம் குடும்பக் கட்டுப்பாடு வரை எடுத்த துறைகளிலெல்லாம் நிபுணத்துவ முத்திரையைப் பதித்தார்.

சிவராஜா கற்பிக்கும் கலையில் இதயம் கவர்ந்தவர். நிறைவான சிறந்த ஆசிரியர். யாழ். மருத்துவ கல்லூரி மாணவர்கள் கடந்த

பதினாறு வருடங்களாக இதை அறிவர். கல்வி போல் நல்ல கல்விமானின் கற்பித்தலுக்கும் எல்லை ஏது? சிவராஜா மாணவன் அறிந்து பாடம் அறிந்து, தேவை அறிந்து கற்பிப்பவர். அவரது மற்ற மாணவர் குழுக்கள் - உப மருத்துவர், சித்த மருத்துவர், தாதிகள், சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், பாடசாலை ஆசிரியர்கள்... என விரிவடைகின்றது.

நிர்வாகம், தலைமைத்துவம், முகாமைத்துவம் சிவராஜாவின் ஆளுமையின் உடன் பிறப்புகள், கருத்தரங்குகள், சுகாதாரப் பட்டறைகள் நடத்துவதில் அவர் கைதேர்ந்தவர். மருத்துவக் கல்லூரி சமுதாய மருத்துவ பகுதியில் நடைபெறும் இவை உலக தரத்திற்கு ஒப்பாக அமைவதற்கு அவரின் நிர்வாகத்திறன் காரணமாகும். அதனால் UNICEF, SCF, WHO. RED CROSS போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் அவரை நாடி வருவதில் வியப்பில்லை.

சிவராஜா நாட்டுப்பற்று மிகுந்தவர். யாழ்ப்பாணத்தின் புனருத் தாரண திட்டத்திற்கு சுகாதார நிலை ஆலோசனை அவராலே முன் வைக்கப்பட்டுள்ளது. அவருக்கு வயது இப்போது 60 தான். மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய அடுத்த பத்து வருடங்களுக்கு சிவராஜாவின் நிபுணத்துவ சேவை மிகவும் தேவையாகும். அதை பொருத்தமாகப் பயன்படுத்துவது நாட்டு மக்களின், அதிகாரிகளின், அரசியல் தலைவர்களின் கடமையாகும்.

சிவராஜா என்ற மனிதர் பதவிகளையும் பாராட்டையும் நாடாதவர். அதனாலோ என்னாலோ நியாயமாக வர வேண்டிய பதவிகளும் தூர நிற்கின்றன என்பது அவருடன் இதுவரைகாலம் நெருங்கிப் பழகுவோர்கள் அறியும் விடயம். அவர் தெய்வத்தில் நம்பிக்கையுள்ளவர். ஆன்மீகத்தின் ஆணையில் செயற்படுபவர் அப்படியானவர்கள் மலிவான பாராட்டுக்களை எதிர்பார்ப்பதில்லை. எனிலும் இந்தச் சிறு குறிப்பு எழுதுவது நாட்டிற்கு நல்லது என்று நினைத்தேன்.

*(வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா அவர்களது 60 வது அகவையில் (19.04.1998) பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களால் உதயன் நாளிதழிளில் எழுதி வெளிவந்த செய்தி. (மருத்துவபீடத்தில் 10.03.2019 அன்று நடைபெற்ற வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பேராசிரியர் நந்தி அவர்களின் புதல்வி திருமதி ஜனனி தேவானந் அவர்களால் வாசிக்கப்பட்டது.)*



**Dr. C.S.Nachinarkinian**
*Melbourne, Australia.*

## The Trails of Dr.Siva

Dear Colleagues,

I am sad I will not be able to participate in your tribute to bid the last farewell to my dear friend and respected colleague late Dr.N.Sivarajah. Siva and I have been friends for 50 years; I worked as a colleague in the Department of Community Medicine for 25 years as full time, part time and volunteer lecturer, tutor and supervisor, and adviser. I am happy I was able to be with Siva and render my shoulder to support him in the many projects he planned and carried out in a selfless manner for the benefit of the people and students during the very difficult periods in the eighties and nineties war time.

Qualified Health personnel left the war zone seeking greener pastures in the Western world; and those within the country left for Colombo and Kandy. Those few left behind carried all the work done earlier by all those who left and took up additional burden as the need was now greater with war injuries, malnutrition and increased diseases.

It is fit to mention here that even Thriposha for children was not coming from Colombo in sufficient amounts; Antimalarial drugs and insecticides, medical drugs and anaesthetics suffered the same fate. Siva spear headed different programmes to help the poor and unfortunate victims of these circumstances.

He arranged a place in Kokuvil for severely malnourished children to be housed with the mothers to be fed with locally prepared high

energy, high protein feeds till the children gained weight. Many people helped this in their own small ways including volunteering to work free. We had to send the recovered children back to the same conditions of living as we could not help them any further.

When there was a dearth of PHMs and PHIs in the area in the eighties, Siva with some of us arranged for the training of "volunteers" with a small allowance to take over some badly affected areas under the guidance of MOHs and PHMs and reduce infant and maternal mortality and morbidity in Jaffna.

When NECORD took up the construction of Kilinochi Hospital as a flagship project, Siva through WHO got a Professor of Hospital Architecture from Philippines to be brought down for the planning of the hospital in the early nineties.  What is seen today in Kilinochi is only the Phase I of the three phased hospital that has been planned. The whole plan is still available with the authorities.

As MOH Kayts, he identified pockets of Leprosy and got assistance for their livelihood and formed an organisation called AHEAD (Association for Health Education and Development) in the early eighties and disbursed the assistance. I mention these as I am not sure whether people in general are aware of all these work he did. Most are aware of what Siva did in AROD and CANE and other projects which I am not mentioning.

During the last fifty years of service, I have worked in many parts of the country and I had not seen any other person who was committed to serve the people so much like Dr. Sivarajah. Working with late Siva, I am sure has added credit to me as well, to be recognised in the LAST PLACE where it all ultimately matters.

I pray for Malaiaracy Sivarajah, Children, Grandchildren, brothers and sister are strong and withstand the demise of such a kind hearted, selfless, peace loving person.

The departed soul of Siva has a special place being at the Lotus feet of Sivan.

Bye Siva for now.

*Message read by Dr.S.Kumaran, Senior Lecturer, Department of Community & Family Medicine, Faculty of Medicine, Jaffna.*

## I asked and received

*I asked for strength*
*And was given difficulties to make me strong*
*I asked for wisdom*
*And was given problems to solve*
*I asked for prosperity*
*And was given a brain and brawn to work*
*I asked for courage*
*And was given danger to overcome*
*I asked for love*
*And was given troubled people to help*
*I asked for favours*
*And was given opportunities*

**I received nothing I wanted**
**I received everything I needed**



**Dr.K. Thabotharan,**

*President,*
*Jaffna Science Association (JSA),*
*University of Jaffna*

# Selfless Service beyond the Medical Faculty

Dr.Sivarajah served as an Assistant General Secretary JSA during the period of 1991-1992, then as the Chair Person for the Medical Sciences section of JSA from 1995-1997, then from 1997-1998 and again from 2008 – 2009. He has also served as a President of the JSA from 2001 - 2002.

He was very much interested in the every step of the growth of JSA. He never missed the Annual Sessions of the JSA and always was there at the Resource person for Popular talks, Thematic seminars, Research paper reviewer and also as a Consultant for the entire activities of the JSA.

Dr.Sivarajah engaged his children to actively participate in the day to day activities of the JSA. Whenever there were issues related for the operations of the JSA, we always approached him for his valuable advices. He guided us in the correct path in strengthening the operations of the JSA

His vision for the popularization of scientific knowledge among the people of the Northern Region was very clear. He worked tirelessly to achieve the goal and stared the operations of the JSA towards achieving the goal.

The immense services contributed by Dr.Sivarajah towards strengthening the JSA will be fondly remembered by the members of the JSA and the people of the Region.

On behalf of the JSA I pay the last respect to our beloved Dr. Sivarajah sir and would like to extend our deepest sympathy to his family members.

May he attain the lotus feet of the almighty God.

Thank you.



**Dr.R.Surenthirakumaran,**
*Former Head & Senior Lecturer,*
*Dept.of Community & Family Medicine,*
*Faculty of Medicine, University of Jaffna*

## எங்களில் ஒருவராய்...

எங்களுடைய உன்னத ஆசான் வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா ஐயா அவர்கள் எங்களை உருவாக்கியவர் மட்டுமல்லாமல் எங்களுக்கொரு தந்தையாக, வழிகாட்டியாக இருந்தவர்.

இங்கே பலர் குறிப்பிட்டது போல பல்வேறு வழிகளில் எங்களை வழிநடத்தி சென்றவர். இன்று எம் மத்தியில் இல்லாமல் பிரிந்து சென்றுள்ளார் ஆனால் அவருடைய பணிகள் தொடர்ந்தும் எங்களால் கொண்டு செல்லப்படும். அவருடைய அந்தப்பணிகள் அவர் உருவாக்கிய மாணவர்களாலும், நல் உள்ளங்களாலும் தொடர்ந்து கொண்டு செல்லப்படும்.

அவருடைய புன்னகை எப்பொழுதும், அவர் கோவப்பட்டு ஒரு நாளும் கண்டதில்லை. இங்கே பலர் குறிப்பிட்டிருந்தார்கள் சமுதாய மருத்தவ துறையில், துறையை கொன்டு நடத்துவதற்கு கஸ்ரமாக இருந்த காலத்தில் நான் ஒரு விரிவுரையாளராக மிகவும் ஆரம்ப காலத்தில் அந்த திணைக்களத்தில் சேர்ந்திருந்தேன். ஆனால் நான் மாணவனாக இருந்த காலத்திலேயே அவருடன் வேலை செய்ய தொடங்கி இருந்தேன். முக்கியமாக 2000 ஆண்டில் இருந்தே யாழ் மாவட்டம் முழுவதும் மக்கள் தென்மராட்சி வடமராட்சி போன்ற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் இருந்தபோது அங்கிருந்த சிறுவர்கள், தாய்மார்களுடைய போசாக்கு சம்மந்தமான வேலைத்திட்டத்தில் நான் அப்போது 4ம் வருட மருத்துவ மாணவனாக அவருடன் சேர்ந்து பணியாற்றி இருந்தேன்.

பின்னர் நான் விரிவுரையாளராக சேர்ந்த பொழுது அவர் ஒரு நாளும் என்னை மாணவனாகவோ அல்லது ஒரு ஆரம்ப விரிவுரையாளராகவோ நடத்தியது கிடையாது தன்னுடைய நண்பனாகத்தான் கருதி செயற்படுவார்.

எப்பொழுதும் புன்னகையுடன் காட்சி தருவார். நாங்கள் உணர்ச்சி வசப்பட்டு சிலவேளை பிரச்சினைகளை கொண்டு செல்லும் போது மிகவும் அமைதியாகவும் சிரித்தபடி சொல்லுவார் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும் ஆனால் அதற்க்கு ஒரு வழியும் இருக்கும் அதுகளை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும். நீர் கனக்க கோவப் படாதேயும் அது உமக்குத் தான் கூடாது என்று சொல்லுவார். அவ்வாறு மிகவும் பண்பட்டவர். அவர் விடயங்களை இங்கு குறிப்பிட்ட மாதிரி எப்பவும் Positive ஆகத்தான் பார்ப்பார்.

மற்றது இன்னொன்று சொல்லுவார் நீங்கள் எல்லாத்தையும் திருத்த முடியாது. நீங்கள் ஒரே ஒரு ஆளைத்தான் திருத்தலாம் அது உங்களை நீங்கள் திருத்திக் கொள்ளலாம். மற்றவர்களை திருத்த வெளிக்கிட்டால் நீங்கள் நேரத்தை விணாக்க வேண்டிவரும். நீங்கள் இங்கு செய்வதற்க்கு நிறைய வேலை இருக்கிறது. எனவே அவற்றை பார்த்து நாங்கள் செய்ய வேண்டும் என்பார்.

அப்படி எங்களை பல விடயங்களில், பல நிறுவனங்களை இங்கு குறிப்பிட்டது போல் மக்களுக்கு என்ன தேவை இருக்கிறதோ அதற்குரிய நிறுவனங்களை ஆரம்பித்த வைத்து அவற்றை திறம்பட நடத்துவதில் முன்னின்றவர்.

அவ்வாறான ஒருவர், பிற்க்காலத்தில் அவருக்கு உடல் நிலை கடந்த சில மாதங்களாக நல்ல நிலைமையில் இல்லை. அவருடைய பணிகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைமைக்கு தள்ளபட்டோம். இருந்தபோதும் என்னென்ன பிரச்சினைகள் வந்தாலும் அவர் எங்களுக்கு சகல வழிகளிலும் ஆலோசனை வழங்கிக் கொண்டு இருந்தவர். இன்று அவர் எங்களை விட்டுபிரிந்து இருக்கிறார். ஆனால் நிச்சயமாக தெரியும் அவர் எங்கிருந்தாலும் எங்களை நல்ல முறையில் வழி நடத்தி தான் விரும்பிய சமுகத்திற்கு பயன்பட வழி செய்வார். உல சுகாதார நிறுவனம் (WHO) Sir ஐ ஒரு போட்டி எடுத்து பிரசுரித்திருந்தார்கள். Sir ஏன் யாழ்ப்பாணத்தை விட்டுசெல்லவில்லை என்று. யாழ்பாணத்தில் இருந்து வேலை செய்யும் போது எனக்கு கிடைத்த அந்த திருப்தி நான் எந்த இடத் திற்க்கு போனாலும் எனக்கு கிடைத்திருக்காது, அந்த திருப்திக்காக நான் யாழ்ப்பாணத்தில் வேலை செய்கிறேன் என்று.

